DEPOSITION OF WITNESS

**In the Court of II Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

**Session Case No :137/2026**
**Present – S.Gopinathan, B.Sc.,B.L.,**
**II Additional District and Sessions Judge, Tiruchirappalli.**
Prosecution witness -1 (LW -1)
(Chapter XXIII Code of Criminal Procedure)

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.பிரதீப் | Caste | : |
| Father Name | : திரு.தட்சிணாமூர்த்தி | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of **04.06.2026.**

**PW - 1 (LW -1 )**

(எதிரி ஆஜர்.) (சாட்சி அவருடைய ஆதார் அட்டை மற்றும் சம்பந்தப்பட்ட போலிசார் மூலம் அடையாளம் காணப்பட்டார்.)

**முதல் விசாரணை:**

நான் தற்போது பெட்டவாய்த்தலை காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 18.04.2025–ம் தேதி நான், காவலர் செந்தில்குமார், உதவி ஆய்வாளருடன் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை சார்ந்த பொருட்கள் சம்பந்தமாக ரோந்து பணிக்கு சிட்லரை கிராமத்திற்கு சென்ற பொழுது செல்வகுமார் டீ கடையில் சோதனை செய்தோம்.

அந்த கடையில் மனித உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தக் கூடிய ஹான்ஸ் பாக்கெட்டுகள் –10 (200 கிராம்) மற்றும் விமல் பான்மசாலா – 25 பாக்கெட்டுகள் (50 கிராம்) ஆகியவற்றை மதியம் 02.30 மணியளவில் உதவி ஆய்வாளர் எங்கள் முன்பாக கைப்பற்றினார். அதற்கு நானும், காவலர் செந்திலும் சாட்சி கையெழுத்து செய்தோம். என்னை ஆய்வாளர் விசாரித்தார்.

LIIADURAI BENCH / TIRUCHY watermark: "II ADU RT TIRICHY"

**எ.த.கு.வி :**

| | |
|---|---|
| **கேள்வி** | உங்களுக்கு மாவட்ட ஆட்சியரிடம் இருந்து எப்பொழுது தகவல் வரப்பட்டது என்றால்? |
| **பதில்** | தகவல் எதுவும் வரவில்லை. |
| **கேள்வி** | ஹான்ஸ் பாக்கெட்டுகளை எந்த இடத்தில் இருந்து எடுக்கப்பட்டது என்று குறிப்பிட்டு கைப்பற்றுதல் மகஜரில் சொல்லப்படவில்லை என்று சொன்னால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | காவல் நிலைய புள்ளி விவர கணக்கிற்காக காவல் உதவி ஆய்வாளர் கேட்டு கொண்டதற்கிணங்க சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் இட்டதாக வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால்? |
| **பதில்** | சரியல்ல. |
| **கேள்வி** | நீங்கள் சொன்ன தேதியில், சொன்ன இடத்தில், சொன்ன நேரத்தில் எந்த பொருட்களையும் கைப்பற்றவில்லை என்றால்? |
| **பதில்** | சரியல்ல. |
| **கேள்வி** | ஹான்ஸ் பாக்கு பாக்கெட் என்ன கலர்? |
| **பதில்** | மஞ்சள் கலர். |
| **கேள்வி** | அந்த பாக்கெட்டில் நலத்திற்கு கேடு என்று தான் இருக்கும், உடல் உயிருக்கு ஆபத்து இருக்காது என்றால்? |
| **பதில்** | நான் அதை பார்க்கவில்லை. |
| **கேள்வி** | ஆகையால் நீங்கள் உண்மையிலேயே அந்த பாக்கை பார்க்கவில்லை என்றாலும், அதை கைப்பற்றியதாக சொல்வது பொய் என்றாலும்? |
| **பதில்** | சரியல்ல. |
| **கேள்வி** | அந்த பாக்கெட்டில் தயாரிப்பு நிறுவனம் பெயர் பதிவு பட்டிருக்கும் என்றால்? |
| **பதில்** | ஆம். |
| **கேள்வி** | அந்த நிறுவனத்தார் யாரையும் ஆய்வாளர் விசாரித்தாரா? |
| **பதில்** | இல்லை. |

<u>**மறுவிசாரணை**</u> **:** இல்லை.

திறந்த வெளி நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நேரடியாக என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சிக்கு படித்து காட்டி அவர் சரியென்று ஒப்புக்கொண்ட பின் இன்று 04.06.2026 என் முன்பு கையெழுத்து செய்தார்.

Sd/.Thiru.S.Gopinathan,

இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,

திருச்சிராப்பள்ளி.

தேதி: 04.06.2026

II ADJ COURT, TRICHY